[மாண்புமிகு பேரவைத் தலைவர்]

மற்றும் கூனூர் வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(47) சேலம், ஆத்தூர் வட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. பழனிமுத்து, ''சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(48) கோவை கழிவு நீர்ப்பண்ணைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுவது குறித்து.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. ''கோவை மாநகர் கழிவு நீர்ப்பண்ணை அமைப் பதற்காக வெள்ளனூர், வெள்ளாளப் பாளையம் இடையர் பாளையம், கஞ்சிக் கோணம் பாளையம், கோணவாய்க்கால் பாளையம், போத்தனூர் ஆகிய ஊர்களில் பெருமளவில் நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை தீவிரப் படுத்தப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நானே நேரடி யாக அறிவேனென்ற காரணத்தினால், விளக்கத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். அந்த இடத்தை நானே பார்வை யிட்டேன். அந்தக் கழிவுநீர்ப் பண்ணையால் அந்த ஊர்கள்

பாதிக்கப்படும் என்பதை நானும் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, வேறு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருகின்ற வகையில், அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது. அந்த வகையிலே அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஆர். செங்காளியப்பன் : தலைவர் அவர்களே, அங்கு பக்கத்திலே இருக்கக்கூடிய அதே பகுதியிலே, சக்தி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில். ஏழை எளிய விவசாயிகள், அரிசன விவசாயிகள் வீடு கட்டுவதற்கென, அங்கு அட்வான்ஸ் செய்து, பூமியைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினாலே, ஏழை, எளிய மக்களுக்கு, அரசாங்கத்தினுடைய வீடு கட்டும் திட்டத்தை மாற்றி, கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காகவும் அந்த இடத்திலே இருந்து அந்தத் திட்டத்தை மாற்றி, பக்கத்திலேயிருக்கிற பகுதிகளிலே வானம் பார்த்த பூமியிருக்கிறது ; அங்கே மாற்றினால், நமக்குச் சௌகரியமாக இருக்கும் ; விவசாயிகள் வரவேற்கிறார்கள். இந்தக் கழிவு நீர் தங்களுக்குத் தேவை என்று வரவேற்கிறார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தின் சார்பாக என்னிடத்தில் விண்ணப்பம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். ஆகவே மாற்றுவதைப்பற்றி அரசு பரிசீலித்து கொண்டிருக்கிறது. அந்த வீடு கட்டும் சங்கம் பாதிக்கப்படாத வகையில் அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்யும்.

(49) தர்மபுரி மாவட்டத்தில் சில நடுவர் நீதிமன்றங்களில் நடுவர் இல்லாதிருப்பது குறித்து.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரி, அரூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த நடுவர் நீதிமன்றங்களில் பல மாதங்களாக நடுவர் இல்லாமையால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(பதில் இல்லை.)